**செய்தி வெளியீடு எண்: 210** **நாள்: 05.03.2019**

## தமிழ்நாடு உணவு பாதுகாப்புத் துறை

உணவு வணிகர்கள் உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம் 2006—ன் கீழ் உணவு பாதுகாப்பு துறையில் உரிமம் மற்றும் பதிவு செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. உணவு பாதுகாப்பு உரிமம் இன்றி வணிகம் புரிவது உணவு பாதுகாப்பு (மற்றும்) தரங்கள் சட்டம் 2006 —ன் பிரிவு 63—ன் கீழ் தண்டனைக்குரியதாகும்.

உணவு பொருள் உற்பத்தியாளர்கள், மொத்த விற்பனையாளர்கள், வினியோகஸ்தர்கள், சில்லறை வணிகம் செய்பவர்கள், உணவகம், தேனீர் மற்றும் காபி நிலையங்கள், இருப்பு வைப்பவர்கள், இறைச்சி விற்பனையாளர்கள், காய், பழங்கள் விற்பனையாளர்கள், தள்ளுவண்டி கடைகள், குளிர்பானம் விற்பனையாளர்கள், தெருக்களில் கூவி விற்பவர்கள், உணவு விடுதிகள், ஐந்து ஸ்டார் உணவகங்கள் மற்றும் அரசு சார்ந்த உணவு வணிகம் என உணவு பொருள் விற்பனை செய்யும் அனைத்து வணிகர்களும் உரிமம் அல்லது பதிவுச்சான்றிதழ் பெறுதல் வேண்டும்.

உணவு பாதுகாப்புத்துறையில் உரிமம்/பதிவு சான்றிதழ் பெற விண்ணப்பம் மற்றும் கட்டணங்கள் இணையதளம் (**https://foodlicensing.fssai.gov.in**) மூலம் மட்டுமே செலுத்திட முடியும். உரிமம் அல்லது பதிவுச்சான்றிதழ் ஒரு வருடம் முதல் ஐந்து வருடங்களுக்கு விண்ணப்பித்து பெற்றுக்கொள்ளலாம்.

ஓராண்டு விற்று கொள்முதல் ரூ.12 லட்சத்திற்கும் கீழ் தொழில் புரியும் உணவு வணிகர்கள் ஓராண்டு கட்டணமாக ரூ.100/— மட்டும் இணையதளம் மூலம் செலுத்தி பதிவுச் சான்றிதழை பெற்றுக் கொள்ளலாம்.

ஆண்டு ஒன்றுக்கு விற்று கொள்முதல் ரூ.12 லட்சத்திற்கும் மேல் உணவு தொழில் புரிவோர் உரிமம் பெறுவதற்கு, ஆண்டொன்றுக்கு ரூ.2000/— மட்டும் கட்டணம் செலுத்த வேண்டும். உற்பத்தியாளர்கள் ஒரு நாளைக்கு ஒரு மெட்ரிக்டன் உற்பத்தி செய்தால் ஒரு வருடத்திற்கு ரூ.3000/— மட்டும், ஒரு மெட்ரிக்டன்னுக்கு மேல் இரண்டு மெட்ரிக்டன்கள் வரை உற்பத்தி செய்பவர்கள் மற்றும் 2 ஸ்டார் முதல் 5 ஸ்டார் உணவகங்கள் ஒரு வருடத்திற்கு ரூ.5000/— மட்டும் கட்டணம் செலுத்த வேண்டும்.

உரிமம்/பதிவுச் சான்றிதழ் பெற மேலே குறிப்பிட்டுள்ள கட்டணங்கள் மட்டுமே இணையதளத்தின் மூலம் செலுத்த வேண்டும். கூடுதல் கட்டணம் செலுத்தத் தேவையில்லை.

தமிழக அரசின் “இ“ சேவை மையங்களாக வட்டாட்சியர் அலுவலகம், மாநகராட்சி மற்றும் நகராட்சி அலுவலகங்களில் செயல்பட்டு வரும் மையங்களின் மூலமாகவும், அங்கீகரிக்கப்பட்ட பொது சேவை மையங்கள் (COMMON SERVICE CENTRES) மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். மேலும், அவரவர் வீட்டிலிருந்தும் http://foodlicensing.fssai.gov.in என்ற இணையதள முகவரியில் ஆன்லைன்(Online) மூலமாகவும் மற்றும் இணையதள மையங்கள் (Browing Centre) மூலமாகவும் விண்ணப்பிக்கலாம். சான்றிதழ் பெறுவதற்கான கட்டணத்தை இணையதள வங்கிசேவை (Internet Banking) மூலமாகவும் அல்லது Credit / Debit card (டெபிட் கார்டு) மூலமாக பணம் செலுத்தலாம்.

விண்ணப்பங்கள் அலுவலர்களால் பரிசீலிக்கப்பட்டு, உரிமம் 60 நாட்களிலும், பதிவுச்சான்றிதழ் 30 நாட்களிலும் வழங்கப்படும். உரிமத்திற்கான சான்றிதழ்களை உணவு பாதுகாப்பு அலுவலர்களிடமிருந்தும், பதிவு சான்றிதழ்களை நியமன அலுவலர்களிடமிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவுச்சான்றிதழ் பெற தேவையான ஆவணங்கள் புகைப்படம் மற்றும் ஆதார் அட்டை நகல் (அ) ஓட்டுநர் உரிமம் (அ) குடும்ப அட்டை.

உரிமம் பெற தேவையான ஆவணங்கள் புகைப்படம், ஆதார் அட்டை நகல் மற்றும் சொத்துவரி இரசீதுநகல் (அ) கட்டிட தீர்வை இரசீது. வாடகை கட்டிடத்தில் இருப்பவர்களாயின்,

வாடகை ஒப்பந்தம் (அ) மின்கட்டண இரசீது (அ) தொலைபேசி கட்டண இரசீது. பங்குதாரர் என்றால் பங்குதாரர் ஒப்பந்தம்.

கூடுதல் கட்டணம் அல்லது முறைகேடு புகார்களுக்கு 044 – 22310989 சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை என்ற தொலைபேசி எண்ணிற்கு தெரிவிக்காலம்.

உரிமம்/பதிவுச் சான்றிதழ் பெற்றவர்கள் காலாவதியாவதற்கு 30 தினங்களுக்கு முன்னதாக புதுப்பித்தலுக்காக விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும், உணவு பாதுபாப்பு தொடர்பான புகார்கள் மற்றும் விண்ணப்பித்த பிறகு உரிமம் மற்றும் பதிவுச்சான்றிதழ் பெறுவதற்கு காலதாமதம் ஏற்பட்டால் 9444042322 என்ற வாட்ஸ் ஆப் எண்ணில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

**உணவு பாதுகாப்பு தொடர்பான புகார்களுக்கு: 94440 42322**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**